பிரசார்பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
*24 08 2026 MONDAY 6 30 PM*
வணக்கம்-மாநிலச்செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

*1)* புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியிலும் விவசாயிகள் தற்போது முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*2)* தமிழகத்தின் நலனை கருத்தில் கொண்டு பரந்தூரில் விமான நிலையம் அமைக்கும் பணிகளை த.வெ.க. அரசு மீண்டும் தொடங்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

*3)* பரந்தூர் விமான நிலைய திட்டத்தை கைவிடுவதாக த.வெ.க. அரசு அறிவித்திருப்பது, தமிழகத்தின் வளர்ச்சியை பின்னுக்கு தள்ளிவிடும் என்று திமுக கூறியுள்ளது.

*4)* தேர்தல் வழக்குகள் முடியும் வரை கரூர் உள்ளிட்ட *5* தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை என்று தேர்தல் ஆணையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

*5)* இலங்கைக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் *Dhruv Jurel* சதம் அடித்தார்.

*>>>>>>><<<<<<*

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியிலும் விவசாயிகள் தற்போது முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், நாளிதழில் வெளியான கட்டுரை ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

பாசனத்திற்கு சூரியசக்தி மின்சாரத்தை விவசாயிகள் பயன்படுத்தி வருவதை பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் கிடைக்கும் உபரி மின்சாரத்தின் மூலம் விவசாயிகள் வருவாய் ஈட்டுவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

*>>>>>>><<<<<<*

தமிழகத்தின் நலனை கருத்தில் கொண்டு பரந்தூரில் விமான நிலையம் அமைக்கும் பணிகளை த.வெ.க. அரசு மீண்டும் தொடங்க வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசியலுக்காக பரந்தூர் விமான நிலைய திட்டத்தை கைவிடுவதா? என்று வினவியுள்ளார்.

எதற்காக இந்த திட்டம் கைவிடப்படுகிறது என்பதற்கான விரிவான விளக்கம் தரப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்

இந்த திட்டத்திற்காக இதுவரை, ஆயிரத்து *700* ஏக்கருக்கும் கூடுதலான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்காக கையகப்படுத்தப்பட்ட நிலத்தை த.வெ.க. அரசு என்ன செய்யப் போகிறது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழகத்தின் வளர்ச்சியை பொறுத்தவரை த.வெ.க. அரசு, அரசியலுக்கு அப்பாற்பட்டு, மக்கள் நலனை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

*>>>>>>><<<<<<*

பரந்தூர் விமான நிலைய திட்டத்தை கைவிடுவதாக முதலமைச்சர் திரு. விஜய் இன்று வெளியிட்டுள் அறிவிப்பு, மாநிலத்தின் வளர்ச்சியை பல ஆண்டுகளுக்கு பின்னுக்கு தள்ளிவிடும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அற்ப அரசியல் காரணங்களுக்காக தமிழகத்தின் நலனை அடகுவைக்கக் கூடாது என்று கூறியுள்ளார்.

மின்னணு பொருட்கள் ஏற்றுமதி, ஆட்டோமொபைல் என அனைத்து துறைகளிலும் முதலிடம் வகிக்கும் தமிழகத்தின் தலைநகரில் சர்வதேச தரத்திலான விமான நிலையம் அமைவது அவசியமானது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தை கைவிட்டுள்ளது மாற்றம் அல்ல என்றும் இது பெருத்த ஏமாற்றம் என்றும் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தமிழகத்தின் வளர்ச்சிக்கு, சென்னையில் இரண்டாவது விமான நிலையம் அமைய வேண்டியது அவசியம் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேளாண் விளை நிலங்களையும், நீர்நிலைகளையும் அழித்து விமான நிலையம் அமைப்பதில் தங்கள் கட்சிக்கு உடன்பாடு இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த 5 ஆண்டுகளில் விமான நிலையம் கட்டப்படவில்லை என்றால், அது தமிழகத்தின் வளர்ச்சிக்கு பின்னடைவை ஏற்படுத்திவிடும் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு புதிய விமான நிலையம் அமைப்பதற்கான இடத்தை அரசு விரைந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்று டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

பரந்து விமான நிலைய திட்டம் ரத்து செய்யப்படும் என்ற த.வெ.க. அரசின் அறிவிப்பினை வரவேற்பதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனை தெரிவித்துள்ள அவர், எந்தவொரு நகரத்தின் வளர்ச்சியும், ஒரு சமூகத்தின் நீர், நிலம், வாழ்வாதாரம் மற்றும் அவர்களின் கண்ணியத்தை பாதிக்கும் வகையில் இருக்கக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

சென்னைக்கு கூடுதல் விமான நிலையம் தேவை என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு மாற்றுத் திட்டத்திற்கு அரசு தெளிவான காலக்கெடுவை நிர்ணயித்து, பொதுவெளியில் அறிவிக்க வேண்டும் என்றும் திரு. மாணிக்கம் தாகூர் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய மாநில அரசுகள் நடவடிகை எடுக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட பல்வேறு பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நியாயவிலை கடைகள் மூலம் குறைந்த விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்க த.வெ.க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் கோரியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தேர்தல் வழக்குகள் முடியும் வரை திருச்சி கிழக்கு, கரூர், விராலிமலை, பெருந்துறை, அம்பாசமுத்திரம், பெருந்துறை ஆகிய தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் அறிவிக்கும் திட்டம் இல்லை என்று தேர்தல் ஆணையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு, தலைமை நீதிபதி திரு. S.A. தர்மாதிகாரி, நீதிபதி அருள்முருகன் அமர்வுமுன் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது, தேர்தல் ஆணையம் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கின் விசாரணை அடுத்த மாதம் 8ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்த விதிக்கப்பட்டிருந்த இடைக்கால தடையும் அன்றைய தினம் வரை நீட்டிக்கப்படுவதாகவும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகத்திலேயே முதன்முறையாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் மக்கள் குறைதீர்க்கும் முகாமில் மனுக்களை பதிவு செய்யும் முறை, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று தொடங்கியது.

இதன் காரணமாக, பொதுமக்களின் காத்திருப்பு நேரம் வெகுவாக குறையும் என்று ஆட்சியர் திரு. தினேஷ் குமார், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - தினேஷ்குமார் 37 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

நீலகிரி, கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte - வி ஆர் துரை - 47 Sec.)

>>>>>>><<<<<<<

மாவட்டச் செய்திகள்

ராமநாதபுரம் மாவட்டத்தில், கடல்சீற்றம் காரணமாக, விசைப்படகு மற்றும் நாட்டுப் படகு மீனவர்கள், இன்று முதல் மறுஉத்தரவு வரும் வரை மீன்பிடிக்கச் செல்வதற்கான அனுமதி ரத்து செய்யப்படுவதாக மீன்வளத்துறை அறிவுறுத்தியுள்ளது.

>>>>>>><<<<<<<

மயிலாடுதுறையில் பள்ளிக்கல்வித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலைத்திருவிழாவை ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<<

தருமபுரி மாவட்டம், குண்டலபட்டி ஏரியில் மரக்கன்றுகள் நடும் விழா, மாவட்ட நீதிபதி ஜோதி முன்னிலையில் இன்று நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

கடலூர் மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தூத்துக்குடி மாநகரப் பகுதியில் உள்ள பக்கீல் ஓடையை அகலப்படுத்தும் பணி, 53 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருவதாக மேயர் திரு. ஜெகன் பெரியசாமி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

வேலூர் மாவட்டம், மோர்தானா அணையிலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

***இலங்கைக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவின் Dhruv Jurel சதம் அடித்தார்.***

***கொழும்பில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாம் நாளான இன்று, ஆட்ட நேர இறுதியில் இலங்கை முதல் இன்னிங்ஸில் . 2 . விக்கெட் இழப்புக்கு . 8 . ரன் எடுத்துள்ளது.***

***முன்னதாக, 5 விக்கெட இழப்புக்கு 300 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸ□ தொடர்ந்து ஆடிய இந்தியா, 9 விக்கெட் இழப்புக்கு 503 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.***

***Dhruv Jurel அபாரமாக ஆடி 115 ரன்னுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.***

***>>>>>>><<<<<<<***

***Cancun சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி - அனிருத் சந்திரசேகர் இணை பட்டம் வென்றது.***

***c/o ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 6-3, 7-6 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் Miguel Angel Reyes Varela - பெலாரஸின் Ivan Liutarevich இணையை வென்றது.***

***>>>>>>>END<<<<<<<***